**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 08.07.2026**
**OS. No. 36/2018**
**வழக்கு சாட்சி DW.1–தோட்டமணி, த/பெ. மாரியப்பன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. பிரதிவாதிகளான குப்பண்ணன் மற்றும் சின்னதம்பி என் சகோதரர்கள் என்றால் சரிதான். வாதி என்னுடைய மாமன் மகன் ஆவார். வாதி எங்களுடைய சொத்தை அவருடைய சொத்து என்று கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்துக்கள் அனைத்தும் வாதியின் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பொறுத்து 26.06.2003ல் வாதியும், அவரது குடும்பத்தாரும் பாகப்பிரினை பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான், ஆனால் அது எங்கள் சொத்தாகும்.

2. அந்த பாகப்பிரினை பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள C செட்யூல் சொத்துக்கள் என்றால் சரியல்ல, அது எங்கள் சொத்தாகும். தாவா சொத்துக்கு சம்பந்தமான அனைத்து வருவாய் ஆவணங்களும் வாதியின் பெயரில்தான் உள்ளது என்றால் சரியல்ல, எங்கள் பெயரில் தான் உள்ளது. நாங்கள் வழக்கு சொத்துக்கு பக்கத்தில் தான் குடியிருக்கிறோம் என்றால் சரியல்ல, வழக்கு சொத்தில்தான் குடியிருக்கிறோம். நான் சொல்வது தவறு என்றும், நான் வழக்கு சொத்துக்கு அருகில் குடியுய்ளோம் என்றும், அதே போல் வாதியிடம் தாவா சொத்தை எங்களுக்கு விற்பனை செய்யுமாறு கேட்டோம் என்றால் சரியல்ல.

3. வாதி விற்கமாட்டேன் என்று சொன்னவுடன் நானும், என் சகோதரர்களான மற்ற பிரதிவாதிகளும் வாதியின் வீட்டுக்கு சென்று 25.02.2018ல் பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 23 வருடங்களாக வாதிதான் அனுபவத்தில் உள்ளார் என்றால் சரியல்ல, நாங்கள் தான் உள்ளோம். எங்கள் சொத்தின் சர்வே எண் என்னவென்றால் ச.எண்.360/1D ஆகும். என் நிரூபண வாக்குமூலத்திலும், என் பதிலுரையில் ச.எண்.360/1D தான் எங்கள் சொத்து என்று சொல்லியுள்ளோமா

என்றால் சொல்லியுள்ளோம். நான் சொல்வது தவறு என்றும், என் நிரூபண வாக்குமூலத்தில் அவ்வாறு எந்த சங்கதியும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. ச.எண்.360/1D ல் உள்ள சொத்து எங்களுடையது என்று காண்பிப்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை.

4. உண்மையாகவே மேற்கண்ட சொத்து எங்களுடையதாக இருந்தால் அதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும், அது எங்கள் சொத்து இல்லாததால்தான் அது சம்பந்தமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் நிரூபண வாக்குமூலத்தில் 36 செண்ட் நிலம் வாதி வசம் உள்ளதாக சொல்லியுள்ள நிலையில் அது தொடர்பாக நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளேனா என்றால் வருவாய் துறையினரிடம் புகார் கொடுத்துள்ளோம். அவ்வாறு புகார் கொடுத்தது சம்பந்தமாக நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால் தான் அது சம்பந்தமாக எவ்வித ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.